**பலங்கொடை நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலங்கொடை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொக்குப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 1,824,729 தொகைக்கான இறுதி இருப்புகளை ரூபா 3,255,748 என கணக்கீடு செய்திருந்தமையால் இறுதி இருப்பு ரூபா 1,431,019 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 484,636 இற்கான பெறுமதி கூட்டிய வரியினை ரூபா 2,702,585 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி ரூபா 2,217,949 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 93,114,545 தொகையான கடன் மீதி ரூபா 92,902,663 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் செலுத்த வேண்டிய கடன் ரூபா 211,882 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி பதிவேட்டின் பிரகாரம் பெறவேண்டிய வீதவரி ரூபா 4,628,151 தொகையினை ரூபா 4,611,698 தொகையென கணக்கீடு செய்திருந்தமையால் பெறவேண்டிய வீதவரி ரூபா 16,453 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் மீதியாகிய ரூபா 1,684,785 தொகையின் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 34,608,887 தொகையினை பதியப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய முற்பணங்கள் ரூபா 32,924,102 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 100,025,414 தொகை கடன்தொகையினை செலுத்தாமை தொடர்பாக சபைக்கு எதிரான உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரண்டு வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 51,113,141 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதிச் சான்றிதழின் பிரகாரம் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 72,967,863 தொகை காட்டியிருந்தமையால் அந்த கணக்குகள் இடையே ரூபா 21,854,722 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 96 வருமானக் கடன்பட்டோரிடம் 4 வருடங்களை மிகைத்த காலம் முதல் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 1,055,770 தொகையினை அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் இரண்டாம் காலாண்டு முதல் அறவிடப்பட்ட ரூபா 1,231,849 தொகைக்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 730,201 தொகைக்கான உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஈ) பஸ் தரிப்பிடத்துடனான வர்த்தக கடைத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன்தொகை தொடர்பாக 2008 ஆண்டு முதல் செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டியின் கூட்டுத்தொகை ரூபா 116,270,592 தொகையினை செலுத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சாள்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 386,323,617 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கைக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX | |

5.6 ஆம் பிரிவு

நீர் மற்றும் மின்சாரத்துடனான உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களில் மாதாந்த சிக்கன வாடகையை விதிகளின் பிரகாரம் பெறுமதி மதிப்பீட்டாளரினால் பெறமதி மதிப்பீடு செய்திருந்த போதிலும், சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1,500 இற்கான மாதாந்த வாடகை ஒன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை

---

விதி 261.2.7

மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 171,000 இற்கான துணைக் கட்டுநிதிகளைக் கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 04 வரை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,875,002 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 7,159,897 தொகையாகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 15,034,899 இற்கான முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆண்டு முதல் செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,568,768 இற்கான முத்திரைக் கட்டணம் கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 04 திகதி வரை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2015 அக்தோபர் முதல் 2015 திசெம்பர் வரை அறவிடப்பட வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணத்தை இனங்கண்டு சப்ரகமுவ மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கு முந்திய ஆண்டுகளின் போது நிலுவையாகக் காணப்பட்ட வீதவரி ரூபா 4,611,698 தொகையில் இருந்து ரூபா 3,120,187 தொகை அதாவது 68 சதவீதத்தை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஒன்றிணைந்த வருமான வரி ரூபா 1,173,473 தொகை, கடை வாடகை ரூபா 175,196 தொகை, இயந்திர வாடகை ரூபா 87,308 தொகை மற்றும் சாக்கடை பவுசர் வாடகை ரூபா 71,450 தொகைகளை அறவீடு செய்வதற்கு கணக்காய்வுத் திகதி ஆகிய 2016 ஏப்ரல் 04 வரை உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது வைப்புச் செய்திருந்த ஆனால் தேறப்படாதிருந்த ரூபா 6,858 தொகை பெறுமதியான இரண்டு காசோலைகள் தொடர்பாக கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 04 திகதி வரையும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பெக்கோ லேடர் இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் இரண்டு வருட காலத்தை விட மிகையான காலம் முதல் பெற வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 73,608 தொகை மீளாய்வாண்டின் போது ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 3.2 நகர சபை வாடிவீடு

நகர சபையினால் நடத்தப்பட்டு வரும் வாடிவீடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர சபையினால் நடத்தப்பட்டு வருகின்ற வாடிவீட்டில் 2015 ஜூன் 29 திகதி வெளிநாட்டு மதுபானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக இருப்பு மெய்மையாய்தலின் போது ரூபா 22,504 தொகை பெறுமதியான 25 வெளிநாட்டு மதுபானம் போத்தல்கள் தொகையொன்று மிகையாகக் காணப்பட்டமையால் சட்டரீதியற்ற முறையில் வெளிநாட்டு மதுபானங்கள் விற்பனை செய்தல் கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் ஒன்றென அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெளிநாட்டு மதுபானங்களை கிரயத்தை விட குறைவாக விற்பனை செய்தல் அல்லது இன்வொயிஸ் போடாமல் விற்பனை செய்தல் ஆகிய காரணங்களால் 2014 ஆண்டு ஜனவரி, மார்ச் மற்றும் திசெம்பர் மாதங்களில் வெளிநாட்டு மதுபானச் சாலையில் கூட்டுத்தொகை ரூபா 355,544 தொகைக்கான மொத்த நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

(இ) 2014 ஜனவரி முதல் 2015 மே வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு மதுபான கடைகளில் மாதாந்த மொத்த இலாபம் விகிதாசாரம் 88 சதவீதம் முதல் 110 மறை சதவீதம் வரையான வீச்சில் முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) விழாக் காலங்களில் வழங்கப்படும் உணவு பட்டியல்களுக்காக கிரய மதிப்பீட்டின் பிரகாரம் விலைகளை திருத்தி அமைப்பதற்கு 2011 ஆண்டு முதல் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் செயலாளர் பதவி உட்பட இரண்டு அபிவிருத்தி அலுவலர் பதவிகள், வருமானப் பரிசோதகர் பதவியொன்று மற்றும் மருந்துக் கலவையாளர் பதவியொன்று வெற்றிடமாகக் காணப்பட்டது.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

2014 ஆண்டின் போது நன்கொடையாக சபைக்கு கிடைத்திருந்த மோட்டார் கிரேடர் இயந்திரம் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது.

**04. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்